
நல்லூர்க் கந்தன்

# நல்லூர்க் கந்தன்

## அருளமுதத் திருமலர்கள்



மெய்கண்டான் அன்பளிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

நந்தா விளக்கே! நல்லைநகர்
நண்ணும் விண்ணோர் தளபதியே!
சிந்தா குலந்தீர்த் தருளளிக்கும்
செம்மான் மகளின் பெம்மானே!
'எந்தாய்! இரங்காய்' எனக்கூவி
எழிலார் கண்கள் குளமாகி
'கந்தா! வந்தாள்' எனக்குவியும்
கரங்கட்(கு) இந்நூல் காணிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
முருகன் துணை
மெய்கண்ட நாயனர் மெல்லடி வாழ்க

நல்லூர்க் கந்தன்

# அருளமுதத் திருமலர்கள்

✱

இஃது
யாழ்ப்பாணத்து நல்லூர்க் கந்தசுவாமி கோவில்
தேர்த்திருவிழாவன்று, மெய்யடியார்களுக்கு
மெய்கண்டான் அன்பளிப்பாக
வழங்கப்பெற்றது.

---

✱

மெய்கண்டான் அச்சியந்திரசாலை
161, செட்டியார் தெரு,
கொழும்பு.
கிளை: ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.
1965

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு :

"முருகாவெனவோர் தரமோ தடியார்
முடிமீ திணைதாள் புனைவோனே !"

விசுவாவசு ௵
ஆவணி மீ 9 உ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரை

# அருள் மின் நிலையம்

ஆலயம் என்றால் ஆன்மாக்கள் லயப்படும் இடம் என்று பொருள். நம்முள்ளே உள்ள ஆன்மாவானது லயித்து ஒடுங்கும் இடமாக கோவில்கள் அமைந்துள்ளன. கோவில் என்பது கோ—இல்லாகும். தலைவனுடைய இல்லம் என்று பொருள். வீட்டுக்கு ஒரு தலைவன், நாட்டுக்கு ஒரு தலைவன், தேசத்துக்கு ஒரு தலைவன், காலத்துக்கு ஒரு தலைவன் என்று இருக்கலாம். ஆனால் காலங் கடந்து எல்லைகடந்து அண்டசராசரங்கள் அனைத்துக்கும் ஒரு பெருந் தலைவன் இருக்கிறான். அவன்தான் இறைவன். இந்த இறைவன் உறையும் இல்லே கோவில் ஆகும்.

நல்லூர், கதிர்காமம்போன்ற சேத்திரங்களுக்குச் சென்று அங்கு திரளும் நல்லடியார் கூட்டத்தோடு கூட்டமாக நின்று அங்கு எதிரொலித்தெழும்பும் ஓங்கார ஒலியைச் செவிமடுக்கும்போது ஒருவித லயம் ஏற்பட்டு ஆன்மா அங்கு ஒடுங்குவதை உள்ளுணர்வுள்ளவர்கள் உணரலாம். இந்த லய உணர்ச்சியைத் தருவனதாம் அருள் கொழிக்கும் ஆலயங்களாக, கோ உறையும் இல்லங்களாக. காலம் கடந்து மனம் கடந்து, பல்கோடி மக்களைத் தம்பால் கவர்ந்திழுத்து நிற்கின்றன.

"ஆண்டவன், அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கிறானே, அவனை வணங்க நல்லூருக்குச் செல்ல வேண்டுமா? கதிர்காமத்துக்குப் போக வேண்டுமா?" என்று சிலர் ஆசங்கை எழுப்புகிறார்கள். மின்சக்தி எங்கும் நிறைந்திருக்கிறது என்பது உண்மைதான். ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது நமது தேவைக்குப் பயன்படும் வண்ணம் உற்பத்தி யாவது "ஜெனரேட்டர்" உள்ள மின் நிலையத்தில்தான். அந்த மின் நிலையம் போன்றவைதான் ஆலயங்கள், கோவில்கள். அத்தகைய ஆலயங்களுக்குச் சென்று வழி படும்போது நமக்கு வேண்டிய அருள் மின் ஏற்றத்தை (Charge) நாம் பெறுகிறோம்.

இத்தகைய அருட் சக்தியைப் பிரவகிக்கும் அருள் மின் நிலையங்களுள் மிகச் சிறப்புற்றதொன்றாக விளங்கி வருகிறது நல்லூர்த் திருப்பதி. கடந்த பல வருடங்களாக, மெய்கண்டான் பக்திப் பாசுரங்களை அச்சிட்டு இந்த நற்பதியின் தேர்த் திருவிழாவன்று இலவசமாக விநியோகித்து வருகிறது. இம்முறையும் இந்நூல் இந்த முறையிலேயே உங்கள் திருக்கரத்தை அடைந்திருக்கிறது.

இந்நூலைப் பெற்று, போற்றிப் படித்து, நல்லை நகரான் திருவருளை எல்லையில்லாதவாறு ஏற்று, எல்லோரும் உய்வோமாக.

**ஆ. கந்தையா**
(மெய்கண்டான் ஸ்தாபகர்)

மெய்கண்டான் அச்சியந்திரசாலை
கொழும்பு-யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் பெருமை

மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலானதேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியிற்
சேலார் வயற்பொழிற் செங்கோடனைச் சென்றுகண்டுதொழ
நாலாயிரங் கண்படைத்திலனே அந்த நான் முகனே

## உபதேசம்

தடுங்கோள் மனத்தை விடுங் கோள்வெகு
ளியைத்தானமென்றும்
இடுங்கோளிருந்த படியிருங்கோளெழு பாருமுய்யக்
கொடுங் கோபச் சூருடன் குன்றந்திறக்கத்
தொளைக்கவைவேல்
விடுங்கோனருள் வந்து தானேயுமக்கு வெளிப்படுமே

## முருகன்

மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினுல் அளக்
கொணுமல்
நிறைவுடன் யாண்டுமாகி நின்றிடும் நிமல மூர்த்தி
அறுமுக உருவாய்த் தோன்றி அருளொடு சரவணத்தில்
வெறிகமழ் கமலப் போதில் வீற்றிருந்து அருளினுனே.

## காக்ஷி

திருவடியும் தண்டையும் சிலம்பும் சிலம் பூடுருவப்
பொரு வடி வேலும் கடம்பும் தடம்புயம் ஆறிரண்டும்
மருவடிவான வதனங்கள் ஆறும் மலர்க் கண்களும்
குருவடிவாய் வந்தென் உள்ளம் குளிரக் குதிகொண்டவே!

## ஆனந்தம்

போக்கும் வரவு மிரவும் பகலும் புறம்பு முள்ளும்
வாக்கும் வடிவு முடிவுமில்லாதொன்று வந்து வந்து
தாக்கு மனேலயந் தானே தருமெனைத் தன்வசத்தே
ஆக்குமறுமுக வாசொல் லொணு திந்த வானந்தமே

(அருணகிரியார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சுமுகந் தோன்றில் ஆறுமுகந் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல் தோன்றும்—நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகாவென் றோதுவார் முன்.

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே—ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரை யான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தி வாழ்வே

(நக்கீரர்)

# கந்தரநுபூதி

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமாலை சிறந்திடவே
பஞ்சக் கரவானைபதம் பணிவாம்.

கார்மா மிசை காலன் வரிற்கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்
தார்மார் பவலா ரிதலா ரியெனுஞ்
சூர்மா மடியத் தொடு வேலவனே.

முருகன் குமரன் குகனென்று மொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவுங்
குருபுங் கவவெண் குணபஞ் சரனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதா மறவா நெறிகா ணவெனக்
கிருதாள் வனசந் தரவென் றிசைவாய்
வரதா முருகா மயில்வா கனனே
விரதா சுரசூ ரவிபா டணனே.

உருவாயருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே.

(அருணகிரியார்)

# கந்தனின் நாமரசம்

சொல்லச் சொல்லத் தித்திக்குமே
சுந்தரனின் நாம ரசம்
எல்லையில்லா இன்பந் தந்து
எங்குந் தானாய் நின்றரசம்

வல்வினை யழிந்துவிடும்
வஞ்சனை ஒழிந்துவிடும்
கல்நெஞ்சமுருகி விடும்
கால பயம் ஓடி விடும்

கல்லாததை அறிய வைக்கும்
கருணை யுள்ளம் படைக்க வைக்கும்
நல்லதையே நாட வைக்கும்
நானென்பதை ஒழியவைக்கும்

காலநிலை கருத வேண்டாம்
காடுமலை சுற்றவேண்டாம்
மேலாந்தவ மொன்றும் வேண்டாம்
மேன்மை எல்லாந் தானே வரும்

(பித்துக்குளி ஸ்ரீ முருகதாஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் அர்ச்சனை

ஓம் சிவக்கனலே, ஓம் சுத்த ஜோதி,
ஓம் ஷண்முகனே, சரவண பவனே,
சுரர் படைத்தலைவா, சுப்ரம் மண்யா,
அருளே யான பொருளே போற்றி,
மந்திர வடிவே வந்தனம் வந்தனம்!
அன்பே யான நண்பா போற்றி!
இருளிடர் போக்கும் இரவியே போற்றி!
கந்தா போற்றி, கடம்பா போற்றி!
சேந்தா, குறிஞ்சி வேந்தா போற்றி!
வேலா, தானவர் காலா போற்றி!

சூரனைக் கொன்ற வீரனே போற்றி!
குன்றைப் பிளந்த குமரா போற்றி!
குகனே, உமையாள் மகனே போற்றி!
இதயக் குகையின் கதிர்மணி போற்றி!
ஓங்காரத்துள் ஒலியே போற்றி!
நீங்காதுள்ளே நிறைவாய் போற்றி!
புலவா ஞானப் பொலிவே போற்றி!
சங்கமிருந்த தமிழா போற்றி!
முருகா, திருமால் மருகா போற்றி!
ஐயா, பன்னிரு கையா போற்றி!

அடியார் துயரங்கடிவாய் போற்றி!
கருத்திலினிக்கும் கரும்பே போற்றி!
அழகா போற்றி, குழகா போற்றி!
வள்ளி யுடனே வடிவேல் பிடித்து,
மயில்மே லேறி வருவாய் போற்றி!
செஞ்சுடர் மேனிச் செவ்வேள் போற்றி!
அருட்பெருஞ் சக்தி ஆண்டவா போற்றி!
நானெனும் அறிவே யானய் போற்றி!
அன்பருக்கபயம் அளிப்பாய் போற்றி!
துன்பந் துடைக்குந் துரையே போற்றி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமளிக்கும் இறைவா போற்றி!
சிந்தைக்கினிய தேவா போற்றி!
கருத்தைக் கடந்த கடவுளே போற்றி!
கனியினும் கரும்பினும் இனியாய் போற்றி!
மலரில் மணமாய் மணப்பாய் போற்றி!
சோதியில் விளைந்த சுடரே போற்றி!
வெய்ய பகைவரை நொய்யப் புடைத்துக்
களத்தில் வெற்றி காட்டுவாய் போற்றி!
ஆணவச் செருக்கை நாணப்புடைத்து
நிருதர் குருதியில் நீந்துவாய் போற்றி! (40)

மரண பயத்தை மாய்ப்பாய் போற்றி!
விதியை வெல்லும் மதியே போற்றி!
வீரருக் காண்மை விளைப்பாய் போற்றி!
அடிமைத்தளைகளை அறுப்பாய் போற்றி!
மடமையிருளை மாற்றுவாய் போற்றி!
வறுமைத் துயர்க்கு மருந்தே போற்றி!
வண்மையும் வளமையும் வளர்ப்பாய் போற்றி!
ஆறுதலளிக்கும் அப்பனே போற்றி!
தீனர்க்குதவும் தெய்வமே போற்றி!
தேனே ஞானத்தெளிவே போற்றி! (50)

இரவிபோல் என்னுள் எழுவாய் போற்றி!
ஆறு தாரமும் அமைய மலர்ந்தே,
ஏழில் ஏறி இலகுவாய் போற்றி!
சகசிரா ரத்தில் விகசித் தொளிரும்
அறுமுகச்சுடரே, அறிவிற் கறிவே;
சக்தி வேல்பிடித்த பக்தர் காவலா!
கவலை போக்குங் கனிந்த முகமும்,
கருணை நிரம்பிய கமலக் கண்ணும்,
அறிவொளி வீசும் அமைதிப் பார்வையும்,
பவளச் செவ்வாய் பளிச்சிடத் தோன்றியென்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னலைத் துடைக்கும் எழிலார் நகையும்,
மலை போலுயர்ந்த மாண்புறு தோளும்,
குன்றைத் தகர்க்குங் கொழும்புயவலிவும்
வரங்களைவாரி வழங்கும் கையும்
அச்சமொழிக்கும் அபயக் கரமும்,
மனோகரமான மழவிளந் திருவும்,
காதலைத் தூண்டுங் கண்மணி யழகும்,
இராப் பகலில்லா இடத்தினி லென்னைக்
கூடிக் குழைந்து குலாவிடும் அன்பும்
இச்சையுங் கிரியையும் இருமருங் கிருக்கப்

பச்சை மயில்மேல் பவனி வந்து
துட்டரை வீழ்த்தித் தொண்டரை வாழ்த்தும்
மறமயக் கருணையும், அற மயக்கருணையும்
கொண்டெப் போதும் கண்டு நான்களிக்க
நினைத்ததும் எதிரே நிற்பாய் போற்றி!
அன்னே, என்றன் அப்பா போற்றி!
குமரா, பரமகுருவே போற்றி!
மனமணியான தினமணி போற்றி!
துன்பக் கடலில் துடிக்கு மென்னைத்
தூக்கிவிட் டுனக்காள் ஆக்குவாய் போற்றி!

காமச் சேற்றிற் கலங்கு மென்னைக்
கைதந் துண்மை காட்டுவாய் போற்றி!
இருமன விகாரத் திடர்படு மெனக்குன்
ஒருமன நேயந் தருவாய் போற்றி!
கடுஞ்சின வேங்கை கவ்விய வென்னை
விடுவித் தமைதி விளைப்பாய் போற்றி!
பொறுமையைச் சீறும் பொறாமைப் படையை
வராது துரத்த வருவாய் போற்றி!
அருட்பணிக் காற்றல் அளிப்பாய் போற்றி!
பொய்மயக் கொழித்து மெய்ப்பொருளுணர்த்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோனசஞ் சீவி யானவா போற்றி!
மருட்டும் பிறவி மயற்பிணிமாற
மலைமருந்தாக வருவாய் போற்றி!
சாகா வாழ்வும் வேகா வுடலும்,
மும்மல மில்லா நின்மல மனமும்,
அண்டினார்க் குதவும் பண்டிதா போற்றி!
சொல்லா தறிய வல்லாய் போற்றி!
பிள்ளைபோ லென்னைப் பேணுவாய் போற்றி!
புல்லரை விலகிச் செல்வாய் போற்றி!
பொய்யா நெஞ்சிற் புகுவாய் போற்றி!

எல்லாம் வல்ல செல்வா போற்றி!
மங்கலமான மனைமக்களுடன்
சீருஞ்சிறப்பும் பேரும் விளங்க
வாழ்வாங்கு வாழும் வகையளி போற்றி!
நாட்டைக்கவரும் பாட்டெனக் களிப்பாய்
உலகையாளும் பலமெனக் கீவாய்!
கண்வலைவீசும் பெண்வலைப் படாது,
பொன்வலைப் படாதுன் போத நிறைவாய்
புலனையடக்கிப் புத்தியை யுனது
நல்லருள் வழியே செல்ல விடுத்து,

சாதுக்களுடனே சாதனஞ் செய்து,
சித்தம் நிலைத்துச் சிவசண்முகாய
நமவென மந்திரம் நவின்றுள்ளடங்கிச்
சமாதி யோகம் சகசமாய்க்கூடி
சுத்த சமத்துவ முத்திபெற் றென்றும்
உன்னுடன் நானாய் என்னுடன் நீயாய்
இரண்டறக் கலந்தே இன்புற வருளாய்
சதாசிவக் கதிரோய் சரணம் சரணம்
சத்திய ஜோதியே சரணம் சரணம்!
குகனே, அகநா டகனே சரணம்!
முருகா ஓம்! அறு முக ஓம் சரணம்!

**யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருக நாமாவளி

சரவணபவ சரவணபவ சரவணபவ பாஹிமாம்
சுப்ரமண்ய சுப்ரமண்ய சுப்ரமண்ய ரக்ஷமாம்

வேல் முருகா வேல் முருகா வேல் முருகா நமஹ ஓம்
வேலாயுதா வேலாயுதா வேலாயுதா சரணம் ஓம்

ஓம் முருகா ஓம் முருகா ஓம் முருகா ஓம்
ஓம் முருகா ஓம் முருகா ஓம் முருகா ஓம்

முருகா முருகா முருகா முருகா
முருகா முருகா திருமால் மருகா
திருமால் மருகா வடிவேல் அழகா
வடிவேல் அழகா வள்ளியின் கணவா
வள்ளியின் கணவா வன்னமயில் வாகா
வன்ன மயில்வாகா வடிவேல் முருகா
வடிவேல் முருகா வந்தெனை யாள்வாய்
வந்தெனை யாள்வாய் வேல் வேல் முருகா
வேல் வேல் முருகா வெற்றிவேல் முருகா
வெற்றிவேல் முருகா ஞானவேல் முருகா
ஞானவேல் முருகா சக்திவேல் முருகா
ஐயா முருகா அரகர முருகா
அரகர முருகா சிவ சிவ முருகா
சிவ சிவ முருகா ஜய சிவ முருகா
ஜய ஜய முருகா ஜய வேல் முருகா
முருகா சரணம் முருகா சரணம்
முருகா சரணம் முருகா சரணம்
முருகா சரணம் முருகா முருகா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் படைத்த வேலவா!

அருள் படைத்த வேலவா வா வா வா
அம்மை கௌரி பாலகா வா வா வா
பொருள் படைத்த ஞானியே வா வா வா
புகழ் படைத்த மேனியாய் வா வா வா
தெருள் படைத்த பாவலா வா வா வா
திறமை கொண்ட காவலா வா வா வா
இருள் துடைத்தெம் நெஞ்செலாம் வா வா வா
எழில்படைத்த மயில்மிசை வா வா வா

அம்மை நீ, என் அப்பன் நீ வா வா வா
அன்பு மிக்கநண்பன் நீ வா வா வா
எம்மையாளும் அரசுநீ வா வா வா
இனிமை நல்கும் மழலை நீ வா வா வா
உண்மையான செல்வம் நீ வா வா வா
ஓங் குயிர்க் குயிரும் நீ வா வா வா
செம்மையான பொலிவுடன் வா வா வா
சிந்தையில் நடஞ் செய வா வா வா

மடமையைத் தொலைத்திட வா வா வா
வாய்மையைத் துலக்கிட வா வா வா
மிடிமையைத் தகர்த்திட வா வா வா
வெறுமயல் தவிர்த்திட வா வா வா
கடமையை உணர்த்திட வா வா வா
கருணையைப் புகுத்திட வா வா வா
அடிமை, நின்அடித்துணை கொண்டென்றும்
அமரவாழ்க்கை எய்தவே வா வா வா

வள்ளியம்மை துணையுடன் வா வா வா
மாது குஞ்சரியுடன் வா வா வா
துள்ளியாடும் மயிலுடன் வா வா வா
ஜோதிஞான வேலுடன் வா வா வா
கொள்ளைகொள்ளும் எழிலுடன் வாவாவா
கொஞ்சும் வெற்றிக் கழலுடன் வா வா வா
உள்ளம் இன்ப வெள்ளமாய்ப் பொங்கவே
ஒளி மலர்ச் சிரிப்புடன் வா வா வா

(பரமஹம்சதாசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் குலதெய்வம்

குமரமலை வீற்றிருக்கும் எங்கள் குலதெய்வம்
குஞ்சரியை மணம் புரிந்த எங்கள் குலதெய்வம்

சமரஸத்தை நிலைநிறுத்தும் எங்கள் குலதெய்வம்
ஷண்முகமாய் அவதரித்த எங்கள் குலதெய்வம்

தண்டாயுதம் தரித்த எங்கள் குலதெய்வம்
தண்டபாணிப் பேருடைய எங்கள் குலதெய்வம்

ஆறுமுகம் படைத்த எங்கள் குலதெய்வம்
ஆறுபடை வீடுடைய எங்கள் குலதெய்வம்

சிவனுருக்கு உபதேசித்த எங்கள் குலதெய்வம்-சிவ
சுப்ரஹமண்ய பேருடைய எங்கள் குலதெய்வம்

பண்டாரம் போலிருக்கும் எங்கள் குலதெய்வம்
பழனி மலைவீற்றிருக்கும் எங்கள் குலதெய்வம்

(திருப்புகழ் மணி)

# மெய்த் தெய்வம்

சரவண பவனே பர தெய்வம்
தரணியில் அவனே மெய்த் தெய்வம்
பக்தற் கிரங்கும் விஸ்வா சன்
பழனிப் பதிவாழ் முருகேசன்
முருகன் திருவடி தரிசனமே
முத்திக் கொருதுணை அறிமனமே
சரவண பவ குக என வருமே
சத்திய ஞானத் திருவுளமே
பவப்பிணி ஒழித்திடும் மருந்துண்டு
பன்னிரு திருக்கரன் திருத் தொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்வடி வேலன் திருவடியே
கதிதரும் துணை அதை நீ பிடியே
சண்முக சுந்தர வேலவனே
சங்கரி ஈன்றருள் சண்முகனே
ஆறுமுகன் திருவடி மலர் மறவோம்
அவனியிலே இனி நாம் பிறவோம்
கந்தனை அன்பினை செய்யுங்கள்
சிந்தனை அவனடி வையுங்கள்
வேலாயுதனை வேண்டுங்கள்
வெய்யப் பிறவியைத் தாண்டுங்கள்.

## வேதப் பொருள்

வேதப்பொருளே சரணம் சரணம்
விண்ணோர் பெருமான் சரணம் சரணம்
போதத்திறனே சரணம் சரணம்
புனைமா வயிலோய் சரணம் சரணம்
நாதத் தொலியே சரணம் சரணம்
நவையில்லவனே சரணம் சரணம்
காதுக்கினிதாம் புகழோய் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WALLETS, DOCUMENT CASES, ETC.

| CODE No. | DESCRIPTION | PRICE PER Dozen |
|---|---|---|
| DCA | Document Case Small with one pocket | 21-00 |
| DCB | Document Case Small with two pockets | 26-00 |
| DCC | Document Case Medium with two pockets | 30-00 |
| DCD | Document Case Large | 65-00 |
| TDC | Travel Document Case | 42-00 |
| WCL | Writing Case Large | 65-00 |
| TAPS | Telephone Appt. Pad Small | 26-00 |
| TAPL | Telephone App. Pad Large | 35-00 |
| WA | Wallet Model "A" | 16-00 |
| WB | Wallet Model "B" | 17-50 |
| WC | Wallet Model "C" | 20-00 |
| WD | Wallet Model "D" (Zip) | 26-00 |
| WE | Wallet Model "E" | 24-50 |
| WF | Wallet Model "F" | 13-50 |
| WG 1 | Wallet Model "G 1" | 20-00 |
| WG 2 | Wallet Model "G 2" | 22-00 |
| WG 3 | Wallet Model "G 3" | 27-00 |
| WG 4 | Wallet Model "G 4" | 32-50 |
| WG 5 | Wallet Model "G 5" | 25-00 |
| WG 6 | Wallet Model "G 6" | 25-00 |
| WH | Wallet Model "H" | 26-00 |
| WKPD | Wallet "K" with Picture and Diary | 37-00 |
| KW | Key Wallet | 12-00 |
| DLC | Driving Licence Cover | 11-00 |
| KP | Key Purse | 19-00 |
| DC | Desk Calendar | 42-00 |
| TAC | Table Appt. Calendar | 66-00 |

Making Embossing Block 17/50 Each.

One Embossing or one Printing free of Charge.

Each Additional Embossing or Printing on each article at -/15 cent each.

## THE MEIHANDAN PRESS

161, SEA STREET, COLOMBO. Phone: 79141

*Branch:* **JAFFNA** *Phone:* 236

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "மெய்கண்டான்"

| | | |
|---|---|---|
| 1. | திருக்குறட் கலண்டர் No. 1 ஸ்பெஷல் | 2-40 |
| 2. | திருக்குறட் கலண்டர் No. 1 *(சிவப்பு)* | 2-25 |
| 3. | நன்மொழிக் கலண்டர் No. 2 | 1-35 |
| 4. | ஸ்ரீ வேலாயுதன் திருக்குறட் கலண்டர் | 1-15 |
| 5. | மாதக் கலண்டர் *(பஞ்சாங்கக் கலண்டர்)* | -85 |
| 6. | சிங்கள கலண்டர் (No. 1 *கலண்டர் அளவுள்ளது)* | 2-15 |
| 7. | ரேபிள் கலண்டர் *(பிளாஸ்ரிக் ஸ்ராண்டுடன்)* | 5-50 |
| 8. | தகரப் படம் *(அழகிய பல மாதிரிகள்)* | 2-75 |
| 9. | No. 1 பிளாஸ்ரிக் தமிழ் டயறி *(பிளாஸ்ரிக் கவருடன்)* | 2-75 |
| 10. | No. 2 பிளாஸ்ரிக் திருக்குறள் டயறி ,, | 2-20 |
| 11. | No. 3 பிளாஸ்ரிக் டெஸ்க் டயறி ,, | 3-60 |
| 12. | No. 4 பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி ,, | 2-20 |
| 13. | No. 5 பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி ,, | 1-75 |
| 14. | No. 6 பிளாஸ்ரிக் பிஸ்னஸ் டயறி 'A' *(பக்கம் 1 நாள்)* | 3-85 |
| 15. | No. 7 ,, ,, ,, 'B' *(பக்கம் 2 நாள்)* | 3-30 |
| 16. | No. 8 அலுவலக (Official) டயறி *(பிளாஸ்ரிக் கவர்)* | 3-55 |
| 17. | ஜெம் பிளாஸ்ரிக் டயறி | 1-85 |
| 18. | புரொபெஷனல் பாக்கெட் டயறி (Appointments) | 3-30 |
| 19 | No. 2 பேர்ஸ் திருக்குறள் டயறி (பேர்ஸ் சகிதம்-With Purse) | 3-15 |
| 20. | No. 7 பேர்ஸ் பிஸ்னஸ் 'B' டயறி *(பக்கம் 2 நாள்)* | 4-40 |
| 21. | ஜெம் பேர்ஸ் டயறி | 2-75 |
| 22. | வலற் டயறி (Wallet Diary - *மிகச் சிறந்தது)* | 6-50 |
| 23. | பிளாஸ்ரிக் நியமன (Appointments) டயறி | 5-50 |
| 24. | பிளாஸ்ரிக் சிங்கள பாக்கெட் டயறி | 2-20 |
| 25. | சிங்கள பஞ்சாங்க 'A' டயறி (Plastic) | 3-85 |
| 26. | ,, ,, 'B' டயறி ,, | 3-30 |

இன்னும் பல உண்டு. மற்றும் விபரங்களுக்கு


## மெய்கண்டான் அச்சியந்திரசாலை

*161, செட்டியார் தெரு,*

*கொழும்பு-11.* போன்: 79141

கிளை: 10, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம் (போன்: 236)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org